**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் திருவிடைமருதூர்**

**மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு**

ROC.No.814/2020/RG/F1, P.Dis. No.36/2021 Dated 07.04.2021

**ஆண்டுபட்டிகை வழக்கு எண். 121/2025**

**வழக்கின் சுருக்கம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | எதிரிகள் நீதிமன்ற காவலில் இருந்த காலம் | : | எதிரி 13/06/2021ம் தேதியன்று காவலுக்குட்படுத்தப்பட்டு, இந்நீதிமன்ற குற்றவியல் பல்வகை மனு எண்.658/2021-ல் 18/06/2021ம் தேதியிட்ட உத்தரவின் படி பிணையில் சென்றுள்ளார். |
| 2. | இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 26/05/2025 |
| 3. | குற்றம் குறித்து கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 13/07/2025 |
| 4. | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | : | எதிரி மற்றும் நிகழ்நிலை புகார்தாரர் தரப்பில் பிரிவு 359BNSS-ன் படி கு.ப.ம.எண். 218/2026 ல் தாக்கல் செய்யப்பட்ட சமாதான மனு 14/07/2026ம் தேதி தள்ளுபடி. செய்யப்பட்டுள்ளது.<br>2. அரசுத் தரப்பில் கு.ப.ம.எண். 219/2026 ல் பிரிவு 348 BNSS-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனு 14/07/2026 ம் தேதி அனுமதிக்கப்பட்டது. |
| 5. | அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாள் | : | **முதல் விசாரணை** / **குறுக்கு விசாரணை**<br>அ.சா.1 - 13/07/2026 / இல்லை<br>அ.சா.2 14/07/2026 / இல்லை<br>அ.சா.3 14/07/2026 / இல்லை<br>அ.சா.4 14/07/2026 / 14/07/2026 |
| 6. | கு.வி.மு.ச பிரிவு 313(1)ஆ குவிமுச கீழ் | : | 14/07/2026 |

| | | | |
|---|---|---|---|
| | எதிரிகளிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | | |
| 7. | எதிரிகள் தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டநாள்: | | இல்லை |
| 8. | தலைமறைவுஎதிரிகள்பற்றியவிவரம் | : | இல்லை |
| 9. | மேல் முறையீட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விவரங்கள் | : | இல்லை |

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

திருவிடைமருதூர்.

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவிடைமருதூர்**

முன்னிலை:**திரு.A. அப்துல்ரஹ்மான், B.Com., L.L.M.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

**2026 ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 14 ஆம் நாள் செவ்வாய் கிழமை**

திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீ பராபர வருடம் ஆனி -30 ம் நாள்

**ஆண்டுபட்டிகை வழக்கு எண். 121/2025**

**(CNR.No. TNTJ 270015502025)**

| | | |
|---|---|---|
| 1 | வழக்கு எண் | சிசி.எண்.121/2025 |
| 2 | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | திருவிடைமருதூர் காவல் நிலையம்<br>குற்றஎண். 687/2021 |
| 3 | குற்றமுறையிடுபவர் | காவல் உதவி ஆய்வாளர்<br>திருவிடைமருதூர் காவல் நிலையம் |
| 4 | எதிரிகளின் விபரம்<br>பெயர்<br>வயது<br>தந்தையின் பெயர்<br>குடியிருப்பு | சந்தோஷ்குமார், வயது 22/2021,<br>த/பெ. பன்னீர்செல்வம்,<br>கொல்லம்பிள்ளையார் கோவில் தெரு,<br>திருவிடைமருதூர். |
| 5 | தேதி நாள்<br>சம்பவம் | 12/06/2021 |
| 6 | முறையீடு | 12/06/2021 |
| 7 | கைது | எதிரி 13/06/2021 ம் தேதியன்று கைது |
| 8 | பிணையில் விடுவித்தல் | எதிரி இந்நீதிமன்ற குற்றவியல் பல்வகை மனு எண்.658/2021-ல் 18/06/2021 ம் தேதியிட்ட உத்தரவின் படி பிணையில் சென்றுள்ளார். |
| 9 | விசாரணை துவக்கம் | 13/07/2026 |
| 10 | விசாரணை முடிவு | 14/07/2026 |
| 11 | தண்டனை அல்லது உத்தரவு | முடிவாக, இவ்வழக்கில் எதிரி பிரிவுகள் 294(பி), 324, 506(ii) இதசவின் கீழ் குற்றவாளி இல்லை என்று |

| | | |
|---|---|---|
| | | முடிவு செய்து எதிரியை கு.வி.மு.சபிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |
| 12 | தீர்ப்புரை நகலை வழங்குவது அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் மீதான காண் முடிவு | -- |
| 13 | கால தாமததிற்கான விளக்கம் | அரசுத்தரப்பு சாட்சிகளை விசாரிக்க காலதாமதம் |

இவ்வழக்கானது 26/05/2025 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு 14/07/2026 அன்று இறுதியான விசாரணைக்கு வந்தபோது அரசுக்காக அரசு உதவி குற்றத்துறை வழக்கறிஞர் நிலை-I **திரு.I.பாண்டியராஜன்**,B.SC.,B.L.,MBA., அவர்களும், எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் **திரு**.R.பிரபாகரன்,M.A.,,B.L., அவர்களும் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

**2. அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்**:-

கடந்த 12/06/2021 ம் தேதி மாலை சுமார் மாலை 06.30 மணியளவில் திருவிடைமருதூர், வேப்பத்தூர், கொல்லம்பிள்ளையார்கோவில் கடைத்தெருவில் பட்டியல் சாட்சி-1 சம்சுதீன் என்பவர் மளிகை கடை வைத்திருந்தபோது, எதிரி பட்டியல் சாட்சி-1ன் கடைக்கு வந்து முட்டை மற்றும் மிக்சர் வாங்கிக்கொண்டு பட்டியல் சாட்சி-1 ஐ பார்த்து என்னடா பொருட்கள் எல்லாம் அதிக விலைக்கு விற்கிற "குச்சிகாரி மகனே தேவடியா மகனே" என்று திட்டியும், எதிரி கையில் மறைத்து வைத்திருந்த சிறிய கத்தியால் பட்டியல் சாட்சி-1ன் உள்ளங்கையில் கிழித்து சிறுகாயத்தை ஏற்படுத்தியும், இன்னைக்கு தப்பிச்சிட்ட

என்னைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்தும் குற்றம் புரிந்துள்ளார். எனவே எதிரி மீது பிரிவுகள் 294(பி), 324, 506(ii) இதச வின் கீழ், திருவிடைமருதூர் காவல் உதவி ஆய்வாளர் ஒரு குற்றயிறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையானபோது, எதிரிக்கு கு.வி.மு.ச. பிரிவு 230-ன் படி வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது. எதிரிக்கு போதிய வாய்ப்பும், சந்தர்ப்பமும் அளிக்கப்பட்டது.

**4. குற்றச்சாட்டு:-**

அரசுத்தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள முகாந்திரங்கள் எதிரி குற்றம் புரிந்திருப்பார் என கருதவும், கருத்தில் கொண்டு செயலாற்றவும் வழிவகுப்பனவாக தெரிந்தமையால், எதிரி மீது பிரிவுகள் 294(பி), 324, 506(ii) இதசவின் கீழ் குற்றச்சாட்டு வனைந்து எதிரிக்கு படித்துக்காட்டி, விளக்கிக் கூறி வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்து தான் குற்றவாளி இல்லை என்று கூறினார். எனவே வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

5. இவ்வழக்கில் அரசுத்தரப்பில் 1 முதல் 7 வரையிலான சாட்சிகள் பட்டியலிடப்பட்டு, அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

6. வழக்கு விசாரணைக்கு முன் எதிரி மற்றும் நிகழ்நிலை புகார்தாரர் தரப்பில் பிரிவு

359BNSS-ன் படி CMP.No.218/2026 ல் சமரச மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்திய தண்டனை சட்டப்பிரிவு 294(b)-ன் படியான குற்றம் சமரசம் செய்து கொள்ள முடியாத குற்றம் என்பதால் மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டு வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**7. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:-**

வழக்கு சம்பவம் குறித்து கும்பகோணம் அன்பு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த அ.சா.1 சம்சுதீன் என்பவரிடம் கடந்த 12/06/2021ம் தேதி பட்டியல் சாட்சி-7 திருவிடைமருதூர் காவல் உதவி ஆய்வாளர் ராஜேஷ்கண்ணன் என்பவர் புகார் வாக்குமூலம் பெற்று வந்துள்ளார். புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. திருவிடைமருதூர் காவல் நிலைய குற்ற எண்.687/2021-ல் சட்டப்பிரிவுகள் 294(பி), 324, 506(ii) இதசவின் படி வழக்கு பதிவு செய்து, அ.சா.ஆ.3 கணினி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். பின்பு வழக்கை உதவி ஆய்வாளர் ராஜேஷ்கண்ணன் புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு 13.06.2021 காலை 06.00 மணிக்கு சம்பவ இடம் சென்று பட்டியல் சாட்சி-4 நிதிஷ்குமார் மற்றும் பட்டியல் சாட்சி-5 சுதன்ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.4 பார்வைமகசர் மற்றும் அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளாக அ.சா.2 ஹாஜாமைதின், அ.சா.3 ஹக்கிம் ஆகியோர் விசாரிக்கப்பட்டுள்ளனர், மேற்படி சாட்சிகளின் வாக்குமூலங்களிலிருந்தும், புலன் விசாரணையிலிருந்தும், வழக்கு சம்பவம் உண்மை என்பது தெரிய வந்ததால் எதிரியை கைது செய்ய தேடியபோது இந்த வழக்கின் எதிரியை 13.06.2021 அன்று பகல் 12.00 மணிக்கு திருவிசநல்லூர் பஸ் ஸ்டாப்

அருகில் நின்றிருந்தவரை தக்க காரணம் கூறி கைது செய்து நிலையம் வந்து தக்க வழி காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். பின்பு காயம்பட்ட அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த கும்பகோணம் அன்பு மருத்துவமனை மருத்துவர் விஜயகுமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ.6 காயச்சான்றிதழ் பெற்று வந்துள்ளார். இறுதியாக இந்த வழக்கு விசாரணையை முடித்து ஆஜர் எதிரி மீது 294(பி), 324, 506(ii) இதச பிரிவுகள் படி 26.06.2021 அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். அ.சா.4 காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் சுகன்யா வழக்கு கோப்பினை பார்வையிட்டு வழக்கின் புலன் விசாரணை குறித்து சாட்சியமளித்துள்ளார்.

8. இத்துடன் அரசுத்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

9. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றும் அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)-ன் படி வினவியபோது எதிரி அதனை மறுத்து பொய்சாட்சியம் என்றார் எதிரி தரப்பில் சாட்சியாக யாரும் விசாரிக்கப்படவில்லை.

**10. விவாதம்:-**

கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் இவ்வழக்கில், அரசுத்தரப்பு சாட்சிகள் மூலம் குற்றச்சாட்டு மெய்பிக்கப்பட்டுள்ளதால் எதிரிக்கு தகுந்த தண்டனை அளிக்க வேண்டுமென்று வாதிட்டார்.

எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், இதனை மறுத்து இவ்வழக்கில் அரசுத்தரப்பில் எதிரி மீதான குற்றம் சந்தேகத்திற்கிடமின்றி மெய்ப்பிக்கப்படாததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

**11. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை:-**

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது என்னவெனில் எதிரி மீது அரசுத்தரப்பில் சுமத்தப்பட்ட குற்றமானது விசாரிக்கப்பட்ட சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் மூலம் எந்த விதமான சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

**தீர்வு**

12. இருதரப்பும் கேட்கப்பட்டது. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களும், சான்றாவணங்கள் மற்றும் வழக்காவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது.

13. அரசு தரப்பில் கடந்த 12/06/2021ம் தேதி மாலை சுமார் மாலை 06.30 மணியளவில் திருவிடைமருதூர், வேப்பத்தூர், கொல்லம்பிள்ளையார்கோவில் கடைத்தெருவில் அ.சா.1 சம்சுதீன் என்பவர் மளிகை கடை வைத்திருந்தபோது, எதிரி அ.சா.1 ன் கடைக்கு வந்து முட்டை மற்றும் மிக்சர் வாங்கிக்கொண்டு அ.சா.1 ஐ பார்த்து என்னடா பொருட்கள் எல்லாம் அதிக விலைக்கு விற்கிற "குச்சிகாரி மகனே தேவடியா மகனே" என்று திட்டியதாகவும், எதிரி கையில் மறைத்து வைத்திருந்த சிறிய கத்தியால் அ.சா.1 ன் உள்ளங்கையில் கிழித்து சிறுகாயத்தை ஏற்படுத்தியதாகவும், இன்னைக்கு தப்பிச்சிட்ட என்னைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்ததாகவும் எதிரி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

14. வழக்கு சம்பவம் குறித்து கும்பகோணம் அன்பு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த அ.சா.1 சம்சுதீன் என்பவரிடம் கடந்த 12/06/2021ம் தேதி பட்டியல் சாட்சி-7 திருவிடைமருதூர் காவல் உதவி ஆய்வாளர் ராஜேஷ்கண்ணன் என்பவர் புகார்

வாக்குமூலம் பெற்று வந்துள்ளார். புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. திருவிடைமருதூர் காவல் நிலைய குற்ற எண்.687/2021-ல் சட்டப்பிரிவுகள் 294(பி), 324, 506(ii) இதசவின் படி வழக்கு பதிவு செய்து, கணினி முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார். மேற்படி கணினி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

15. வழக்கு சம்பவம் குறித்து நிகழ்நிலை புகார்தாரரான சம்சுதீன் என்பவர் தான் புகார் வாக்குமூலம் கொடுத்துள்ளார். மேற்படி சம்சுதீன் என்பவர் அரசு தரப்பில் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரியை தெரியும் என்றும், தன் கடையின் வாடிக்கையாளர். சுமார் 05 ஆண்டுகளுக்கு முன்பு தேதி மாதம் ஞாபகம் இல்லை என்றும், 2021-ம் அன்று மாலை சுமார் 06.30 மணியளவில் தான் தன்னுடைய கடையில் வியாபாரம் பார்த்து கொண்டிருந்தபோது வெளியே ஒரே சத்தமாகவும், கூட்டமாகவும் இருந்தது என்றும், தான் என்ன என்று வெளியே வந்து பார்த்தபோது யாரோ தன்னை சத்தம் போட்டுக்கொண்டே பின்னால் இருந்து தள்ளிவிட்டார்கள் என்றும், அதில் தான் கீழே விழுந்துவிட்டதாகவும், தன்னை பின்னால் இருந்து தள்ளியதாலும், தான் எழுந்து திரும்பி பார்ப்பதற்குள் ஓடிவிட்டதால் யார் தள்ளினார்கள், எதற்கு தள்ளினார்கள் என்று தனக்கு தெரியாது என்றும், தனக்கு ஏற்பட்ட காயத்திற்காக தான் கும்பகோணம் அரசு தலைமை மருத்துவமனையில் முதல் உதவி சிகிச்சை பெற்று, மேல் சிகிச்சைக்கு கும்பகோணம் அன்பு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்ததாகவும், அங்கு திருவிடைமருதூர் போலிசார் வந்தார்கள் என்றும், அங்கு போலிசார் எழுதி வைத்திருந்த பேப்பரில் கையொப்பம் மட்டும் பெற்றுக்கொண்டார்கள் என்றும், அதில் என்ன எழுதியிருந்தது

என்று தனக்கு தெரியாது என்றும், படித்து பார்க்காமால் கையெழுத்து போட்டதாகவும், தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து மட்டும் தன்னுடையது என்றும், இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், புலன் விசாரணை அதிகாரியிடம் குவிமுச பிரிவு 161ன் படி அளித்த வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளித்ததால், அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். குறுக்கு விசாரணையிலும் அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1 ன் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

16. வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளாக அ.சா.2 ஹாஜாமைதின் மற்றும் அ.சா.3 ஹக்கிம் ஆகியோர் விசாரிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தங்களது சாட்சியத்தில், சுமார் 05 ஆண்டுகளுக்கு முன்பு தேதி மாதம் ஞாபகம் இல்லை என்றும், 2021-ம் அன்று மாலை சுமார் 06.30 மணியளவில் தங்களது அப்பா அவருடைய கடையில் வியாபாரம் பார்த்து கொண்டிருந்தபோது வெளியே ஒரே சத்தமாகவும், கூட்டமாகவும் இருந்தது என்றும், அவர் என்ன என்று வெளியே வந்து பார்த்தபோது யாரோ அவரை சத்தம் போட்டுக்கொண்டே பின்னால் இருந்து தள்ளிவிட்டார்கள் என்றும், அதில் அவர் கீழே விழுந்துவிட்டதாகவும், அவரை பின்னால் இருந்து தள்ளியதாலும், அவர் எழுந்து திரும்பி பார்ப்பதற்குள் ஓடிவிட்டதால் யார் தள்ளினார்கள், எதற்கு தள்ளினார்கள் என்று தங்களுக்கு தெரியாது என்றும், அவருக்கு ஏற்பட்ட காயத்திற்காக கும்பகோணம் அரசு தலைமை மருத்துவமனையில் முதல் உதவி சிகிச்சை பெற்று, மேல் சிகிச்சைக்கு கும்பகோணம் அன்பு மருத்துவமனையில் சிகிச்சையில் இருப்பதாகவும் வெளியில் வேலையில் இருந்த என்னிடம் போன் மூலமாக தங்களுக்கு தகவல் சொன்னார் என்றும், மற்ற விவரங்கள்

எதுவும் தெரியாது என்றும், இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் தங்களை விசாரிக்கவில்லை என்றும் புலன் விசாரணை அதிகாரியிடம் குவிமுச பிரிவு 161ன் படி அளித்த வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளித்ததால், அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளனர். குறுக்கு விசாரணையிலும் அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை.

17. அ.சா.4 சுகன்யா, காவல் உதவி ஆய்வாளர், தனது சாட்சியத்தில், தான் தற்போது திருவிடைமருதூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளர் ராஜேஷ்கண்ணன் என்பவருடன் தான் சேர்ந்து பணிபுரிந்து வந்ததால் அவருடைய கையெழுத்து, கையொப்பம், எழுத்து, நடை, தனக்கு நன்கு பரிட்சயம் என்பதாலும் வீண் காலதாமதம் மற்றும் பொருட்செலவை கருத்தில் கொண்டு இந்த வழக்கின் தன்மை கருதி ஆவணங்களின் அடிப்படையில் அவருக்காக சாட்சியம் அளிப்பதாகவும், கடந்த 12.06.2021ம் தேதி உதவி ஆய்வாளர் ராஜேஷ்கண்ணன் நிலைய பொறுப்பில் இருந்தபோது, கும்பகோணம் அன்பு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த அ.சா.1 சம்சுதீன் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து அன்றைய தினம் 09.30 மணிக்கு நிலைய குற்ற எண்.687/2021 சட்டப்பிரிவுகள் 294(பி), 324, 506(ii) இதசவின் படி வழக்கு பதிவு செய்ததாகவும், பின்பு வழக்கை உதவி ஆய்வாளர் ராஜேஷ்கண்ணன் புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு 13.06.2021 காலை 06.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சுதன், நிதிஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும்

மாதிரிவரைபடம் தயார் செய்துள்ளதாகவும், பின்பு பார்வை மகசர் சாட்சிகள் சுதன், நிதிஷ்குமார் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும், பின்பு சம்பவ சாட்சிகள் ஹாஜாமைதின், ஹக்கிம் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும், பின்பு கும்பகோணம் அன்பு மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த அ.சா.1 சம்சுதீன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும், மேற்படி சாட்சிகள் சம்பவத்தைப் பற்றி தெளிவாகவும் விளக்கமாகவும் என் வாக்குமூலத்தில் உள்ளபடி கூறினார்கள என்றும், மேற்படி சாட்சிகளின் வாக்குமூலங்களிலிருந்தும், புலன் விசாரணையிலிருந்தும், வழக்கு சம்பவம் உண்மை என்பது தெரிய வந்ததால் எதிரியை கைது செய்ய தேடியபோது இந்த வழக்கின் எதிரியை 13.06.2021 அன்று பகல் 12.00 மணிக்கு திருவிசநல்லூர் பஸ் ஸ்டாப் அருகில் நின்றிருந்தவரை தக்க காரணம் கூறி கைது செய்து, நிலையம் வந்து தக்க வழி காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும், பின்பு காயம்பட்ட அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த கும்பகோணம் அன்பு மருத்துவமனை மருத்துவர் விஜயகுமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றிதழ் பெற்று வந்துள்ளார் என்றும், மேற்படி மருத்துவர் காயம்பட்ட அ.சா.1 க்கு ஏற்பட்ட காயம் சிறுகாயம் என்று சான்றளித்துள்ளார் என்றும், காயச்சான்றிதழ் இறுதியாக இந்த வழக்கு விசாரணையை முடித்து ஆஜர் எதிரி மீது 294(பி), 324, 506(ii) இதச பிரிவுகள் படி 26.06.2021 அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

18. வழக்கு சம்பவத்தில் பாதிக்கப்பட்டதாக சொல்லப்படும் அ.சா.1 புகார்தாரர் சம்சுதீன் என்பவர் விசாரணையின் போது அரசுத்தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம்

அளிக்காமல், பிறழ்சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ள நிலையில், ஆவணங்களை பரிசீலனை செய்ததில், அ.சா.1-ம், எதிரியும் சமாதானம் செய்து கொண்டு, இந்நீதிமன்றத்தில் சமாதான மனு தாக்கல் செய்யப்பட்டடு, அது இந்த நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. எனவே அ.சா.1 ன் மீது எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும் அ.சா.1 அரசுத்தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்காத நிலையில், புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தினை மட்டுமே வைத்து எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டதாக கருத முடியாது.

19. இவ்வழக்கின் அரசுத்தரப்பு சாட்சிகள் அனைவரும் பிறழ் சாட்சியாக விசாரிக்கப்பட்டு அரசுதரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ள போதிலும், அரசு தரப்பு சாட்சிகள் யாரும் எதிரியின் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்கும் விதமாகவோ, அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாகவோ எந்த சாட்சியமும் அளிக்கவில்லை. குறிப்பாக வழக்கு சம்பவத்தில் பாதிக்கப்பட்ட நபராக சொல்லப்பட்டுள்ள அ.சா.1 எதிரியின் மீதான குற்றச்சாட்டுக்களை பொறுத்து எந்தவித சாட்சியமும் அளிக்காதது அரசு தரப்பு வழக்கின் மீது மிகுந்த சந்தேகத்தை ஏற்படுத்தும் விதமாக உள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இவ்வழக்கில் அரசுத்தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**20. முடிவாக, இவ்வழக்கில் எதிரி பிரிவுகள் 294(பி), 324, 506(ii) இதசவின் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரியை கு.வி.மு.சபிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

வழக்கு சொத்துக்கள் ஏதும் இல்லை. எதிரி எழுதிக்கொடுத்துள்ள பிணை பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 14/07/2026-ம் தேதியில் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம் (A. அப்துல்ரஹ்மான்)
மாவட்டஉரிமையியல்மற்றும்நீதித்துறைநடுவர்,
திருவிடைமருதூர்.

**அரசுத்தரப்பு சாட்சிகள்;**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. சம்சுதீன் (புகார்தாரர்) |
| அ.சா.2 | திரு.ஹாஜாமைதின் (கண்ணுற்ற சாட்சி) |
| அ.சா.3 | திரு. ஹக்கிம் (கண்ணுற்ற சாட்சி) |
| அ.சா.4 | திரு. சுகந்தி (காவல் உதவி ஆய்வாளர்) |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்;**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 12/06/2021 | புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1 ன் கையெழுத்து மட்டும் |
| அ.சா.ஆ.2 | 12/06/2021 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.3 | 12/06/2021 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 13/06/2021 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.5 | 13/06/2021 | மாதிரி வரைபடம் |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.6 | 13/06/2021 | காயச்சான்றிதழ் |

**<u>அரசு தரப்பு சான்று பொருட்கள்</u>**; இல்லை

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்</u>**; இல்லை

**<u>குறிப்பு;</u>**

1. எதிரி 13/06/2021ம் தேதியன்று காவலுக்குட்படுத்தப்பட்டு, இந்நீதிமன்ற குற்றவியல் பல்வகை மனு எண்.658/2021-ல் 18/06/2021ம் தேதியிட்ட உத்தரவின் படி பிணையில் சென்றுள்ளார்.

2. சாட்சிகள் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. இவ்வழக்கின் தீர்ப்பு சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. இவ்வழக்கில் வழக்கு சொத்து இல்லை.

5. வழக்கின் தீர்ப்பு நகல் மாண்பமை தலைமை நீதித்துறை நடுவர் தஞ்சாவூர் (இருப்பு) கும்பகோணம் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது.

ஒப்பம் (A. அப்துல்ரஹ்மான்)
மாவட்டஉரிமையியல்மற்றும்நீதித்துறைநடுவர்,
திருவிடைமருதூர்.